**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

Calendar Case No: CC. 134/2019

DEPOSITION OF WITNESS for Prosecution அ.சா.7

Name : **திரு. மகேந்திரன்**

Father's Name/Husband Name: **திரு. பழனிவேல்**

Village : பெண்ணகோணம்

Taluk : **குன்னம்**

Age : 30/ 2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அ.சா.6 சின்னதுரை என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு நான் சொந்த வேலையாக பெண்ணகோணத்திற்கும் வடக்கலூருக்கும் நடுவே குட்டை அருகே சென்று கொண்டிருந்தபோது, சம்பவம் நடந்ததாக சொல்லி போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தனர். போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தனர். இடத்தின் அமைப்பை எழுதிக் கொண்டிருந்தனர். அவ்வாறு எழுதியதில் நான் சாட்சி கையொப்பமிட்டேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த பார்வை மகஜரில் உள்ள **இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். புகார்தாரர் எனது உறவினர் என்றால் சரிதான். புகார்தாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.